**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 625/2018 |
| நாள் | 21.11.2025 |
| வா.சா.1 | அமிர்தலிங்கம் |
| வயது | 58 |
| ஊர் | மண்மங்கலம் |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு, பிரதிவாதிக்கு சார்வு செய்யப்பட்டதை காட்டுவதற்கு அஞ்சலக ஒப்புகை அட்டைடைய இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி, சட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள உள்ள முகவரியில் வசிக்கவில்லை என்பது எனக்கு நன்றாக தெரியும் என்றும், அதனால் தான் நான் பிரதிவாதிக்கு சார்வு செய்யப்பட்டதாக கூறப்படும் அஞ்சலக ஒப்புகை அட்டையை இவ்வழக்கில் ஒரு ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் என்னுடைய பெயர் அமிர்திலிங்கம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் கணவரை கடந்த 23 ஆண்டுகளாக எனக்கு தெரியும். நான் பிரதிவாதியை தவிர்த்து, வேறு யாருக்கும் கடனாக தொகையை வழங்கியதில்லை. பிரதிவாதியின் கணவர் எனக்கு பல நபர்களை அறிமுகம் செய்து வைத்து, அவர் அறிமுகம் செய்து வைத்த நபர்களுக்கு எல்லாம் நான் தொகையை கடனாக வட்டிக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு கொடுத்த தொகைகள் திரும்ப வரவில்லை என்பதால், எனக்கும், பிரதிவாதி கணவருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு, எங்கள் இருவருக்கும் இடையே பேச்சுவார்த்தை இல்லாமல் போனது என்றால் சரியல்ல. நான் அனுப்பியதாக கூறப்படும் சட்ட அறிவிப்பு, பிரதிவாதிக்கு முறையாக சார்வு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி தற்போது, சுங்ககேட்டில் குடியிருந்து வருகிறார்.

பிரதிவாதி 2018ம் வருடம் மத்தியில் பிரதிவாதிக்கும், அவரது கணவருக்கும் உடல்நலம் சரியில்லாமல் இருந்ததால் மருத்துவ சிகிச்சைக்காக திருச்சி ஸ்ரீரங்கத்திற்கு சென்று வசித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதியும், அவரது கணவரும் ஸ்ரீரங்கத்தில் இருப்பது தெரிந்தே, நான் கரூரில் வசிப்பதாக சட்ட அறிவிப்பு கொடுத்து வழக்கை பொய்யாக நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் சாட்சி கையொப்பம் செய்த ஹரிஹரசுதனின் பெயர் மற்றும் முகவரியை ஹரிஹரன் சுதன் தான் எழுதினார். வா.த.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டை எழுதிய நபர் தான் பேனாவை எடுத்து வந்தார். ஹரிஹரசுதன் மற்றும் சுப்பிரமணியம் ஆகியோர்களை நான் தான் வரவழைத்தேனா என்றால் இல்லை. பிரதிவாதி தான் உடன் அழைத்து வந்தார். ஹரிஹரசுதன் என்பவர் என்னுடன் இருந்தார். சுப்பிரமணியம் என்பவரை பிரதிவாதி அழைத்து வந்தார். ஹரிஹரசுதன் மற்றும் சுப்பிரமணியம் ஆகியோர்களை பிரதிவாதிக்கு யாரென்றே தெரியாது என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதியுடையது அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதியின் கணவர் பணி ஓய்வு பெற்ற நபர் என்பதால், எனக்கு வேண்டிய நபர்களை பயன்படுத்தி வா.த.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டை பிரதிவாதிக்கு எதிராக பூர்த்தி செய்து, இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் எந்ததொகையும் வாங்கவில்லை என்பதால் அசல் வழக்கு பிரதிவாதிக்கு எதிராக தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.